**உலர்வலய வாழ்வாதார மற்றும் பங்குபற்றுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் 2013 சனவரி 01 முதல் செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதி**

உலர்வலய வாழ்வாதார மற்றும் பங்குபற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் 2013 சனவரி 01 முதல் செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜிஓஎஸ்எல்) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎப்ஏடீ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2004 திசெம்பர் 15 ஆந் திகதிய 636 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துதல், குறிக்கோள்கள், நிதியளிப்பு காலம் என்பன

உலர்வலய வாழ்வாதார மற்றும் பங்குபற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் விவசாய அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. விவசாய உற்பத்திகளை நிரந்தரமாக அதிகரிப்பதற்காக மூலவளங்களைத் தயார்படுத்துவதற்கான பொறிமுறையை அறிமுகப்படுத்துவதும் அனுராதபுரம், குருநாகல், பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் உற்பத்திக்கான பெறுமதியைக் கூட்டுவதுமே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட மொத்த யூஎஸ் டொலர் 30.4 மில்லியனாக உள்ளதுடன் அதில் யூஎஸ் டொலர் 22.309 மில்லியன் அல்லது 73 சதவீதம் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தினால் (ஐஎப்ஏடீ) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு செய்யப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2006 சனவரியில் ஆரம்பித்ததுடன் 2013 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல் படுத்தப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக உலர்வலய வாழ்வாதார மற்றும் பங்குபற்றுதல் மாவட்ட நிகழ்ச்சித்திட்ட காணி நிதிகளுக்காக 2009 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய காணிக்கொள்கை மானிய இலக்கம் 712 – எல்கே இன் கீழ் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் (எப்ஏஓ) ரூபா 40 மில்லியன் நிதிக்காக மற்றுமொரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2006 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்

பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்க மற்றும் கடன் வழங்கும் முகவர் என்போரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியங்கள் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் மற்றும் மானியங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் குறித்துரைக்கப்பட்ட கடன் மற்றும் மானியங்களின் உடன்படிக்கைகயின் அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்

(ஈ) கடனின் மற்றும் மானியங்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் நிகழ்ச்சித்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்தியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஐ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்தும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2013 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்த 09 மாதங்களுக்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2013 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) 2013 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்த 09 மாதங்களுக்கான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்றும், 2013 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக்கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க மீளளிப்புகளுக்கான விண்ணப்பங்களை உறுதிப்படுத்துவதற்காக நியாயமாக நம்பிக்கையை வைக்கமுடியும் என்றும்,

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(ஊ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் 9 மாத மீளாய்வுக் காலப்பகுதிக்கான செலவினம் ரூபா 147,363,848 ஆனதுடன் 2013 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான திரண்ட செலவுகள் ரூபா 3,155,948,143 ஆகும். 9 மாத மீளாய்வுக் காலப்பகுதிக்கான செலவினம், முன்னைய ஆண்டிற்குமான செலவினம் மற்றும் 2013 செப்தெம்பர் 30 இல் உள்ளவறாான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| விடயங்கள் | 2013 செப்தெம்பர் 30 இல் முடிவுற்ற 9 மாத காலப்பகுதிக்கான செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | - | 41,062,332 | 457,133,552 |
| மோட்டார் வாகனங்களும் உபகரணங்களும் | 161,980 | 1,656,419 | 78,152,070 |
| தொழில்நுட்ப உதவி | 21,621,828 | 47,983,129 | 159,782,929 |
| பயிற்சியும் செயலமர்வுகளும் | 29,404,049 | 110,538,743 | 510,899,096 |
| ஆரம்ப செயலமர்வுகள் | எதுவுமில்லை | எதுவுமில்லை | 2,409,534 |
| உயரும் செயற்பாட்டுக் கிரயம் | 51,592,374 | 93,944,335 | 545,449,233 |
| சேவை வழங்குனர்களுடனான ஒப்பந்தங்கள் | 15,557,458 | 11,981,094 | 39,778,590 |
| சந்தைப்படுத்தல் நிதியச் செலவினம் | 29,026,159 | 183,769,059 | 1,109,393,141 |
| அதிகரித்துச் செல்லும் இலாபம் | - | 66,900,000 | 252,949,997 |
| மொத்தம் | 147,363,848 | 557,835,111 | 3,155,948,142 |

## 4.2 கட்டுநிதி நிதியக்கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், 09 மீளாய்விற்கான மாத காலப்பகுதியின் கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான மொத்தப் பெறுவனவுகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் 2013 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான அதிலுள்ள மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | யூஎஸ் டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 730,779 | 92,926,490 |
| கூட்டு :- மீள் நிரப்பல்கள் | 623,778 | 79,458,192 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 561,330 |
| | 1,354,557 | 172,946,012 |
| கழி :- பற்றுதல்கள் | 1,354,557 | 172,946,012 |
| 2013 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான மீதி | எதுவுமில்லை | எதுவுமில்லை |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சிவில் வேலைகளுடன் தொடர்புபட்ட ரூபா 12,899,782 கூட்டுமொத்தத் தொகையான பிடிமானப் பணம் மற்றும் வறுமை ஒழிப்பு நிதியம் மற்றும் சந்தைப்படுத்தல் நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பன செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதிக்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்தது. ஆகவே செய்யப்பட்ட வேலைகள் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பௌதீகச் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணக்காய்விற்காகக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, மீளாய்வுக் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தின் சில கூறுகளில் திருப்திகரமான முன்னேற்றம் எய்தப்பட்டிருக்கவில்லை. 2013 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான இலக்குகள் மற்றும் அவை எய்தப்பட்ட மட்டங்களின் விபரம் பின்வருமாறாகும்.

| | கூறு | நிதி | | பௌதீகம் | |
|---|---|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | இலக்குகள் | எய்தப்பட்டவை |
| | | ரூபா மில் | ரூபா மில் | எண்ணிக்கைகள் | எண்ணிக்கைகள் |
| (i) | மழை நீரிலிருந்தான பயிர்ச்செய்கை | 420 | 403 | 2,800 | 2,505 |
| (ii) | சிறிய நீர்ப்பாசன முறைமைகளின் அபிவிருத்தி | 540 | 502 | 750 | 708 |
| (iii) | சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி | | | | |
| | i. சன சமூக நிலைய கட்டிட நிர்மாணம் | 810 | 793 | 150 | 120 |
| | ii வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் | | | 1,600 | 847 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) சந்தைப்படுத்தலும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தியும் | | | | |
| i. சிறு வணிகங்கள் | 355 | 291 | 5,000 | 4,631 |
| ii முன்மாதிரி விற்பனை ஒப்பந்தங்கள் | | | 20,000 | 11,443 |
| iii சந்தைப்படுத்தல் வசதிகள் | | | 300 | 278 |

(ஆ) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தினால் (ஐஎப்ஏடீ) மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையில் தனியார் நிறுவகம் ஒன்றால் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான நடவடிக்கைகள் மீதான ஓர் ஆய்வுக் கற்கை மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுக் கற்கை அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் மீதான கருத்துரைகள் பின்வருமாறு மீளச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(i) பழங்கள் மற்றும் மரக்கறிச் சேகரிப்பு நிலையங்களின் ஸ்தாபிப்பு

விவசாயிகளுக்கு சந்தை வசதிகளை ஏற்படுத்துவதற்காக பழங்கள் மற்றும் மரக்கறிச் சேகரிப்பு நிலையங்களுக்காக பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் இரு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. பழங்கள் மற்றும் மரக்கறிச் சேகரிப்பு நிலையங்களின் கீழ் பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக ஓர் தனியார் கம்பனியுடன் வேறான ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி குறித்த கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மீதான விவசாயிகளுக்கான பயிற்சி
- நலன்புரி நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு, விவசாயச் சங்கங்களுக்கு மாற்றப்பட்டு அவற்றை விவசாயிகளின் நலனோம்பலுக்காகப் பயன்படுத்தல்.
- கடன் வசதிகள், உள்ளீடுகள், விஸ்தரிப்பு சேவைகள் வழங்கப்படல்

**(ii) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி**

ஆய்வுக்கற்கை அறிக்கையில் அவதானிக்கப்பட்ட மற்றும் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

- ஏறத்தாழ 40 சதவீதமான கிணறுகள் குடிநீர் ஊற்றெடுக்காமையால் கைவிடப்பட்டுக் காணப்பட்டன.
- பல பால் சேகரிப்பு நிலையங்களும் குடிநீர்க் கிணறுகளும் தனியார் காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. ஆகவே, அத்தகைய காணிக் கொள்வனவுகள் தொடர்பில் பிணக்குகள் ஏற்பட்டுள்ளன.

(ii) சிறிய தொழில் முயற்சிகள்/ தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இக் கூறின் கீழ் தாபிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 2,500 தொழில் முயற்சிகளில், 1,648 தொழில் முயற்சிகள் மாத்திரமே ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்பட முன்னரே அத்தகைய தொழில் முயற்சிகள் தொடர்ந்து இயங்கி வந்தவையாகும். மேலும், 8 சதவீதமான தொழில் முயற்சிகள் அவற்றின் செயற்பாடுகளை ஆரம்பித்திராததுடன் 23 சதவீதமான தொழில் முயற்சிகள் அவற்றின் செயற்பாடுகளை நிறுத்தியிருந்தன.

## 06. முன்னேற்ற மீளாய்வு

(i) நிகழ்ச்சித்திட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மொத்த ஏற்பாடு மற்றும் ஏற்பட்ட மொத்தச் செலவினம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| விபரம் | யூஎஸ் டொலர் மில்லியன் | | ரூபா மில்லியன் | | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | ஏற்பாடுகள் | செலவினம் | ஏற்பாடுகள் | செலவினம் | |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | | | | | % |
| - கடன் | 22.479 | 22.276 | 2,942.0 | 2,769 | 94 |
| - மானியம் | 0.367 | 0.26 | 46 | 34 | 74 |
| இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு | 1.66 | 1.37 | 191 | 175 | 92 |
| சமூகப் பங்களிப்பு | 1.57 | 1.57 | 181 | 178 | 98 |
| மொத்தம் | 26.076 | 25.476 | 3,360.0 | 3156 | 93 |

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் உள்ளவாறு ஒவ்வொரு கூறின் கீழும் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு மற்றும் மொத்தச் செலவினம் பின்வருமாறாகும்.

| | மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு | செலவிடப்பட்ட தொகை | எதிர்பார்க்கப்பட்ட இலக்கு | எய்தப்பட்ட பௌதீக நிலை | பயன்பாட்டின் வீதம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | எண்ணிக்கைகள் | எண்ணிக்கைகள் | % |
| மேட்டு நில விவசாய அபிவிருத்தி | 420 | 403 | 3,600 | 3,272 | 96 |
| சிறிய நீர்ப்பாசன முறைமை அபிவிருத்தி | 540 | 502 | 750 | 708 | 95 |
| கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 810 | 793 | - | - | 98 |
| சிறிய நிதி வசதிகள் | 277 | 276 | 5,000 | 4,631 | 100 |
| சந்தைப்படுத்தல் மற்றும் சிறிய தொழில் முயற்சி அபிவிருத்தி | 355 | 291 | 25,300 | 16,081 | 82 |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 731 | 726 | - | - | 99 |
| காணிப் பரிமாற்றப் பிணக்குகள் மீதான கற்கை | 46 | 35 | - | - | 76 |
| | 3,179 | 3,026 | 34,650 | 24,692 | |